# எனதுள்ளம் எழுந்து

எனதுள்ளம் எழுந்து அமைதியைப் பொழிந்து
யேசு ராஜனுக்கு கோடி நன்றி
(எனதுள்ளம் )

**1**
மலராகவே உள்ளம் நான் வாடினேன்
தென்றலென என்னைத் தாலாட்டினாய்
நீர் இன்றியே வாடும் பயிராகினேன்
வற்றாத நீரோடை நீயாகினாய்
புவியில் வாழ நீ தந்த கொடைகள்
ஏராளம் அறிவேனையா ( 2 )
அதை நினைத்தாலே என் நெஞ்சம்
நெகிழாதோ இறைவா - தலைவா ( எனதுள்ளம் )

**2**
உண்மையன்றி அது மேலானது
எமக்காக நீ தந்த வேதம் இது
உன்னோடு நான் தினம் உரையாடவே
எமக்காக மறை நூல்கள் தந்தாய் ஐயா
புவியில் வாழ நீ தந்த கொடைகள்
ஏராளம் அறிவேனையா ( 2 )
அதை நினைத்தாலே என் நெஞ்சம்
நெகிழாதோ இறைவா - தலைவா ( எனதுள்ளம் )